# DEPOSITION OF WITNESS
## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.
## Deposition of witness plaintiff / defendant
## MC.No.1/2024

| | |
|---|---|
| Name: சிவராமன் | Caste : |
| Father Name : பிச்சை | Calling: |
| District | Religion : |
| | Age: |

**CHIEF EXAMINATION: RW1**

நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் ஆவேன், எனது முதல்விசாரணையை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 17.04.2015ம் தேதியிட்ட என்னுடைய ஆதார் அட்டையின் நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகவும், 24.01.2018 ஆம் தேதியிட்ட குற்ற எண்.16/2018ன் முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகவும், 29.03.2018ம் தேதியிட்ட குற்ற எண்.16/2018ன் சட்ட மாறுதல் அறிக்கையின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகவும், 29.03.2018ம் தேதியிட்ட சிந்துபட்டி போலீசாரின் வேண்டுகோள் கடிதம் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.4** ஆகவும், 28.03.2018ம் தேதியிட்ட 1வது மனுதாரரின் கு.வி.மு.ச பிரிவு 161(3)ன் வாக்குமூலம் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.5** ஆகவும், 05.03.2024ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் சம்பள ரசீது **எ.ம.சா.ஆ.6** ஆகவும், 08.03.2024ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் வங்கி அறிக்கை இணையவழி நகல் **எ.ம.சா.ஆ.7** ஆகவும், 12.03.2024ம்

தேதியிட்ட எதிர்மனுதாரர் பஜாஜ் நிறுவனத்தில் பெற்ற கடன் விபர அறிக்கை இணையவழி நகல் **எ.ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

திருமணத்தின் போது மனுதாரருக்கு 1 பவுன் மாங்கல்யமும், 3 பவுன் தங்க தாலி கொடியும் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை அசிங்கமாக பேசி, மனதளவில் கொடுமைப்படுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சில நேரங்களில் மனுதாரர் என்னுடன் கைகலப்பில் ஈடுபட்டு எனக்கு உணவு கொடுக்காமல் பட்டினி போட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.6ன் சம்பள சான்றிதழ் வழக்கிற்காக மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தற்போது பணிபுரியும் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் மாதம் ரூபாய் ஐம்பதாயிரம் சம்பளம் பெறுகிறேன் என்றால் சரியல்ல. நான் திருமங்கலம், கற்பகம் நகர் 3வது தெரு, வடக்கன் குளம் என்ற இடத்தில் ஓவியா கலைக்கூடம் என்ற நிறுவனம் நடத்திவருவதாகவும், அந்த கலைக்கூட்டத்தில் யோக, ஸ்போகன் இங்கீலிஸ் போன்றவை நடத்திவருவதால் நான் மாதம் 50000/- பெறுகிறேன் என்றால் சரியல்ல. ராமச்சந்திர நிறுவனத்தில் மேற்சொன்னது போல் செய்துவருவதால் அதிலும் எனக்கு மாதம் 20000/- பெறுகிறேன் என்றால் சரியல்ல. நான் ஆசிரியர்பணி போக தெருக்களில் ஓவியம் வரைவதற்கும், சுவர் விளம்பரம் செய்வதற்கும், கோவில்களில் வண்ணம் தீட்டுவதற்கும் தனியாக வருமானம் பெறுகிறேன் என்றால் சரியல்ல. எனது குழந்தை 10ம் வகுப்பு தேர்வுக்காக அவருடைய ஆதார் அட்டையை கேட்டப்போது நான் அதை கொடுக்க மறுத்துவிட்டேன் என்றால் சரிதான், பின்னர் கொடுத்துவிட்டேன். கடந்த 10 வருடமாக எனது மனைவிக்கும், எனது

குழந்தைக்கும் நான் எந்த பொருளுதவியும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவியுடனும் எனது குழந்தையுடனும் சேர்ந்து வாழ கோரி கடந்த பத்து வருடத்தில் நீதிமன்றத்திலும் , காவல் நிலையத்திலும் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 5ல் நகைகளை மனுதாரர் எடுத்துக்கொண்டு சென்றவிட்டார் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் மது அருந்திகொண்டு பல பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு மனுதாரரை வீட்டை விட்டு அடித்து விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல, அவர் தான் ஆட்டோகாரர் ரமேஷ் என்பவருடன் தொடர்பில் இருந்தார். எனது நி்ருபண வாக்குமூலத்திலும், திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனுவிலும் மனுதாரர் என்னுடன் சந்தோஷமாக வாழ்ந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் 8 பவுன் நகைகளை திருமங்கலம் மார்க்கெட்டில் உள்ள நகை அடகுகடையில் அடகு வைத்து அதில் மது குடித்து செலவழித்துவிட்டேன் என்றால் சரியல்ல. மீதமுள்ள மனுதாரர் நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நி்ருபண வாக்குமூலம் பாரா 13ல் மனுதாரர் டெய்லர் தொழில் செய்வதாகவும், மகளிர் சுயஉதவி குழு மூலமாகவும், அழகு சாதனப்பொருட்கள் விற்பனை செய்தும் ஏலச்சீட்டு நடத்தியும், கட்சி பணிகளுக்கு ஆட்களை திரட்டியும் சம்பாதித்து வருகிறார் என்று சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் தற்போது இதய நோயிக்கும், கர்ப்பபை நோய்காகவும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் அவருக்கு மருத்துவச்செலவிற்காகவும், 2வது மனுதாரருக்கு உசிலம்பட்டி ஆர்சி பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருவதால் அவருக்கு பணம் கட்டவேண்டியவர் என்பதால் கணவர், தந்தை என்ற முறையில்

அவர்களுக்கு செலவு செய்ய வேண்டும் என்றால் நான் 2வது மனுதாரருக்கு மட்டும் பணம் தருகிறேன். என்னுடன் உடன்பிறந்தவர்கள் ஐந்து சகோதரிகள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் எனது தந்தை வீட்டில் இருக்கிறார்கள் என்றால் இரண்டு அக்காகள் உள்ளனர். அவர்கள் வீட்டில் இருப்பதால் தான் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கொலைவெறியோடு அருவாள்மனை வைத்து என் உடம்பில் வெட்டி உடலளவிலும், மனதளவிலும் கொடுமை செய்தார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொன்னதற்கு காவல் நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருடன் சேர்ந்து வாழ தற்போது விரும்புகிறேனா என்றால் இல்லை. திருமங்கலம் தாலுகா, நடுக்கோட்டை கிராமம், சர்வே எண்கள் 19/2, 13/10, 19/19, 54, 111, 30/7 எனது தந்தை பெயரிலும், திருமங்கலம் நகர் வார்டு 15, சோமசுந்தரம் தெருவில், கதவு எண் 10/78ல் உள்ள மனை எனது தாய் பூச்சம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இதுபோக நடுக்கோட்டை கிராமத்தில் எனது அப்பா பெயரில் பூர்வீக வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தில் எனக்கும் உரிய பங்கு உள்ளது என்றால் சரிதான். நான் அரசு பள்ளி ஆசிரியராக இருந்தும், மேற்படி சொத்துக்களிலும் இருந்தும் மேற்சொன்ன வழிகளில் இருந்தும் மாதம் பல லட்சம் வருமானம் பெறுவதால் நான் மனுதாரருக்கும், 2வது மனுதாரருக்கும் ஜீவனாம்சம் தொகை தர கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல, நான் அரசு பள்ளியில் பகுதிநேர ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன் எனது மாத வருமானம் தற்போது ரூபாய் 12,000/-ம் தான். மேற்சொன்ன விவசாய நிலங்கள், நடுக்கோட்டை கிராமத்திலுள்ள வீடும், திருமங்கலத்திலுள்ள வீடும் ஆகிய அனைத்தின் மதிப்பும் 5 கோடிக்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை மனதளவிலும்,

உடலளவிலும் கொடுமைப்படுத்தவில்லை என்றாலும், நான் தான் பல பெண்களுடன் தொடர்பு வைத்து கொண்டு மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றாலும் சரியல்ல. தற்போது திருமங்கலத்திலுள்ள புவனா என்ற பெண்ணுடன் தொடர்பில் இருப்பதால் தான் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி நான் தான் திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல .

**மறு விசாரணை :**

குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய தாய், தந்தையர் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான்.

**மனுதாரர் தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை ;**

மனுதாரரை பெண் கேட்டபோது மேற்படி சொத்துக்கள் அனைத்திலும் எனக்கு பங்கு உள்ளதாக கூறி மேற்படி திருமணம் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

S.d. Sivaraman
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti